**<u>தேதி:-07-11-2022 அசல்வழக்கு எண்.17/2016 வா.சா.1 (சர்தார்பாட்சா)</u>**

**<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-</u>**

எனது மகளும், 1ம் பிரதிவாதியும் திருமணமானவுடன் 5வது தெரு மகபூப்பாளையத்தில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அதே தெருவில் நாங்கள் வேறு ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தோம். என்னுடைய மருமகன் மதுரை செயிண்ட் மேரீஸ் பள்ளியில் வேலை கிடைத்தவுடன் ரூ.1,30,000/-க்கு அன்சாரி நகர் 6வது தெருவில் ஒத்திக்கு குடியிருந்தாரா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் வாடகைக்கு இருந்த வீட்டின் கதவு எண்.15, அன்சாரிநகர் 5வது தெருவில் குடியிருந்தேன். நானும் ஒத்திக்கு தான் குடியிருந்தேன். நான் ஒத்திக்கு குடியிருந்தேன் என்பதை காண்பிக்க ஒத்திப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்று சொன்னால் முடியாது. 1ம் பிரதிவாதியும், என்னுடைய மகளும் தரைதளத்தை எப்போது இடித்து கட்டினார்கள் என்றால் 2010ம் வருடம் இடித்துக் கட்டினார்கள். என்னுடைய மகளும், 1ம் பிரதிவாதியும் கிரையம் வாங்கிய வீடுகள் மூன்றும் ஓட்டுவீடுகள் ஆகும். ஆனால் அதை நானும், என்னுடைய மனைவியும் சேர்ந்து கிரையம் வாங்கினோம். வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான கிரையஆவணங்களில் எங்கேயாவது நானோ என்னுடைய மனைவியோ கிரையத்தொகை கொடுத்ததாகவோ, அதனடிப்படையில் கிரையம் பெற்றதாகவோ அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 முதல் 4 வரையிலான கிரைய ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.2ல் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. தாவாச் சொத்தில் தரைதளம் எப்போது கட்டி முடிக்கப்பட்டது என்றால் 2010 - 2011 வருடம் கட்டி முடிக்கப்பட்டது. 2011 ம் வருடம் கிரஹப்பிரவேசம் வைத்தார்கள். 2011 ம் வருடம் எந்த மாதம் கிரகப்பிரவேசம் வைத்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த கிரகப்பிரவேசத்தில் அவர்களுக்கு எவ்வளவு மொய்பணம் வந்தது என்பதை நான் மொய்நோட்டை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் பார்க்கவில்லை. கிரகப்பிரவேசம் செய்யும் போது தரைதளம், முதல்தளம், இரண்டாம்தளம் கட்டி முடித்துவிட்டார்கள் என்றால் 1ம் பிரதிவாதி சேர்ந்து கட்டி முடிக்கவில்லை. 2010ம் வருடமே தரைதளம், முதல்தளம், இரண்டாம் தளம் கட்டி முடித்துவிட்டதாக

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல்தளத்தை கட்டி முடிப்பதற்கு 1 ம் பிரதிவாதியும், எனது மகளும் எந்த வங்கியில் எவ்வளவு தொகை கடனாக பெற்றார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தல்லாகுளம் ரெப்கோ வங்கியில் ரூ.11,00,000/- பகுதி பகுதியாக கொடுத்தார்கள். 2 ம் பிரதிவாதியான ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிட்., நிறுவனத்தில் மாதாந்திரமாக எவ்வளவு தொகை (E.M.I.) ஆக எவ்வளவு தொகை செலுத்தி வந்தார்கள் என்றால் ரூ.14,500 செலுத்தி வந்தார்கள். 2009 ம் வருடம் என்னுடைய மகளுக்கு சிறுநீரக பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2011 ம் வருடம் தான் சிறுநீரக பிரச்சனை ஏற்பட்டது. 2008 ம் வருடம் கடைசியில் இருந்தே 2009 ம் வருடம் முதலில் இருந்து என்னுடைய மகளுக்கு சிறுநீரக பிரச்சனை காரணமாக டயாலிசிஸ் செய்து வந்ததாக சொன்னார்கள். என்னுடைய மகளுக்கு Lee கிட்னி சென்டரில் டயாலிசிஸ் செய்தார்கள். அதன்பிறகு என்னுடைய மகளுக்கு மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள். அதன்பிறகு என்னுடைய மகளுக்கு உடல்நிலை மிகவும் மோசமடைந்ததால் திருச்சியிலுள்ள A.B.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகளுக்கு இரத்தவகை பிரிவு O+ ஆகும். நானும், என்னுடைய மனைவியும் O+ இரத்தவகை பிரிவைச் சேர்ந்தவர்கள். 1 ம் பிரதிவாதி A1 B+ இரத்தபிரிவைச் சேர்ந்தவர். தற்போது சாட்சி எனக்கும், என்னுடைய மகளுக்கும் ஒரே வகை இரத்தம் ஆகும் என்றும், என்னுடைய மனைவிக்கு வேறு வகை இரத்தம் என்றும் கூறுகிறார். மருத்துவர் என்னிடம் என்னுடைய மகளுக்கு சிறுநீரகத்தை தானமாக கொடுக்கும்படி கேட்டார். எனக்கு சிறுநீரகத்தை மகளுக்கு தானமாக கொடுக்க முடியாது என்று கூறிவிட்டேன். 2008 ம் வருடத்தில் இருந்து என்னுடைய மகள் இறக்கும் வரையில் 1 ம் பிரதிவாதி என்னுடைய மகளின் சிகிச்சைக்கு எவ்வளவு தொகை செலவு செய்தார் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் நான் தான் என்னுடைய மகளுக்கு சிகிச்சைக்காக செலவு செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் என்னுடைய மகள் சிறுநீரக பிரச்சனையால் பாதிக்கப்பட்டதால் நான் சிகிச்சைக்காக இவ்வளவு தொகை செலவு செய்தேன் என்ற விபரத்தை குறிப்பிட்டுக் கூறியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய மகளுக்கு சிகிச்சை அளித்ததாக சொல்லப்படும் மருத்துவ செலவுதொகை குறிப்புகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1 ம் பிரதிவாதி

தன்னுடைய மனைவியை காப்பாற்ற 2008 ம் வருடத்தில் இருந்தே ரூ.20,00,000 வரை செலவு செய்திருந்தார் என்றும், அவருக்கு வேறு இரத்த வகை இருந்ததால் அவரால் சிறுநீரகம் தானமாக கொடுக்க முடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியிடம் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக ரூ.3,00,000 கேட்டதற்கு 1 ம் பிரதிவாதி கொடுக்க மறுத்துவிட்டார். மேற்படி விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் கூறவில்லை. வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணங்களில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரிதான். என்னுடைய மகள் மீனாட்சி மிசன் மருத்துவமனையில் இறந்தார். வா.சா.ஆ.8 ஆவணத்தில் 1 ம் பிரதிவாதி ரெப்கோ வங்கிக்கு பணம் செலுத்தியதாக உள்ளது அதில் 1 ம் பிரதிவாதி கையெழுத்து செய்துள்ளார். நான் கையெழுத்து செய்யவில்லை. வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.12 வரையுள்ள ஆவணங்களில் 1 ம் பிரதிவாதி ரெப்கோ வங்கிக்கு பணம் செலுத்தியதாக கண்டுள்ள நிலையில் நான் 1 ம் பிரதிவாதியிடம் பணம் கொடுத்து 1 ம் பிரதிவாதி வங்கிக் பணம் செலுத்தியுள்ளார். 1 ம் பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்து ரெப்கோ வங்கிக்கு பணம் செலுத்தினார் என்ற விபரத்தை என்னுடைய பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பிராதில் சொல்லியுள்ள அனைத்து விபரங்களையும் வா.சாஆ.16 ஆன பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வா.சா.ஆ.16 ல் சொல்லாத விசயங்களை புதிதாக பொய்யாக பிராதில் சேர்த்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.